செய்தி வெளியீடு எண் : 120 நாள் : 23.02.2013

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வருவாய்த்துறை சார்பில் மக்களைத் தேடி வருவாய்த் துறை – "அம்மா" திட்டம்.

| | |
|---|---|
| AMMA - | **A**ssured<br>**M**aximum Service to<br>**M**arginal People in<br>**A**ll Villages |

24.02.2013 அன்று துவங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் துவக்க விழா ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், வின்னப்பள்ளி கிராமத்தில் மாண்புமிகு வருவாயத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் முதன்மைச் செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர், வருவாய் நிருவாக இணை ஆணையர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர்அவர்கள் பொது மக்களின் தேவைகளை அறிந்து, தாய் குழந்தைக்கு உணவளிப்பது போல தமிழக மக்களுக்கு உதவி வருகிறார்கள்.

தமிழக மக்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 65–வது பிறந்த நாளை முன்னிட்டு வருவாய்த் துறை சார்பில் மக்களைத் தேடிச் சென்று உதவும் திட்டம்தான் "அம்மா" திட்டம்.

(AMMA - **A**ssured **M**aximum Service to **M**arginal People in **A**ll Villages).

தற்போது மக்கள் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு பலமுறை வந்து மனுக்கொடுத்து வருகின்றனர். வட்டாட்சியருக்கு பல வெளிவேலை காரணமாக அவரை சந்தித்து முறையீடு

செய்ய இயலாத நிலையில் தாமதம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. மேலும், வயதானவர்கள், ஏழைகள், பணம், நேரம் செலவழித்து தாலுக்கா அலுவலகத்திற்கு வந்து செல்வதும் சிரமமாக உள்ளது.

"அம்மா" திட்டத்தின்படி வாரத்தில் ஒரு நாள் ஒரு ஊராட்சியில் வருவாய்த் துறை சார்பில் முகாமிட்டு வருவாய்த் துறையின் முதியோர் ஓய்வூதிம் உள்ளிட்ட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனை பட்டாக்கள், வீட்டு மனை பட்டாக்கள், உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ் ஆகியவற்றை ஊராட்சியில் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக வழங்க வழி செய்யப்படும். இதுதவிர குடும்ப அட்டை, குடிநீர் பிரச்சனைகள், நிலம் சம்மந்தமான பிரச்சனைகளையும் நேரில் ஆய்வு செய்து தீர்வு காணப்படும்.

இதன்மூலம் வருவாய்த் துறை மக்களுக்கு ஆற்றி வரும் சேவை துரிதப்படுத்தப்பட்டு மக்கள் பயனடைய வழிவகை செய்யப்படுகிறது. பொதுமக்கள் இந்த திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ர.ரங்கன் 24/2/13
அரசு முதன்மைச் செயலாளர்
வருவாய்த் துறை

Principal Secretary to Government
Revenue Department
Secretariat, Chennai - 600 009.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை -9